# வலயக்கல்வி அலுவலகம் – வடமராட்சி
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022

| தரம் : 07 | கணிதம் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : | | புள்ளி |

### பகுதி - I

❖ **எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

01. ஒரு தேசிப்பழத்தின் விலை ரூபா 8.00 எனின் 40.00 ரூபாவிற்கு எத்தனை தேசிப்பழங்கள் வாங்கலாம்?

02. 4 நாட்களில் எத்தனை மணித்தியாலங்கள் உள்ளன?


03. சுருக்குக.
$19 - 7 \times 2$

04. A = {"200 220" என்னும் எண்ணிலுள்ள இலக்கங்கள்} தொடை A யின் மூலகங்களை தொடைக் குறியீட்டினுள் எழுதுக.

05. 556 ☐ என்னும் எண்ணானது 6 ஆல் மீதியின்றி வகுபடுமாயின் வெற்றுக்கூட்டினுள் இடவேண்டிய இலக்கம் ஒன்றைக் குறிப்பிடுக.

06. ஏழின் நான்காம் வலு என்பதை சுட்டிக் குறியீட்டில் எழுதுக.

07. 48 இன் எல்லாக் காரணிகளையும் எழுதுக.

08. 


i) தரப்பட்ட கோணத்தின் பெயரை எழுதுக.

ii) இக் கோணம் எவ்வகைக் கோணமாகும்?



kalvi.lk
CamScanner

09. $\frac{2}{3}$ என்ற பின்னத்திற்கு இரு சமவலுப் பின்னங்கள் எழுதுக.

10. -8 , -5 , 0 , -1 , 6 இத் திசை கொண்ட எண்களை ஏறுவரிசைப்படுத்துக.

11. கூட்டுக.
$3.45 + 6.78$

12. சுருக்குக.
$5a + 8 - 2a + 6 + a - 4$

13. "T" என்னும் எழுத்திலுள்ள கோண வகைகள் அனைத்தையும் எழுதுக.

14. பெறுமானம் காண்க.
$2^3 + 3^2$


15. 70 436 என்ற எண்ணின் இலக்கச்சுட்டி யாது?

Education கல்வி අධ්‍යාපන

16. 27.39 என்ற தசம எண்ணை எண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.

17. $3\frac{1}{4}$ km ஐ m இல் தருக.

18. பின்வருவனவற்றில் ஒழுங்கான பல்கோணிகள் எவை?




19. தீர்க்க.
$2x + 5 = 9$

20. ஒரு சமபக்க முக்கோணியின் சுற்றளவு 36cm ஆகும். அதே சுற்றளவைக் கொண்ட சதுரம் ஒன்றின் பரப்பளவு யாது?

kalvi.lk
CamScanner

## பகுதி - II

❖ **எவையேனும் ஐந்து வினாக்களிற்கு மட்டும் விடை தருக.**

01. i. விமல் தனது பயணத்தின் $\frac{3}{4}$ பங்கு தூரத்தை பஸ் வண்டியிலும் $\frac{1}{5}$ பங்கு தூரத்தை ஆட்டோவிலும் சென்றான். அவன் பஸ்வண்டியிலும் ஆட்டோவிலும் சென்ற தூரம் பயணத்தின் என்ன பின்னம்?

ii. விமலா தன்னிடமுள்ள $4\frac{3}{4}$ m துணியிலிருந்து சட்டை ஒன்றைத் தைப்பதற்கு $1\frac{3}{8}$ m துணியை வெட்டினாள். எஞ்சிய துணியின் அளவு யாது?

iii. பின்வரும் கலப்பு எண்களை முறைமையில்லாப் பின்னங்களாக மாற்றுக.

a. $7\frac{3}{5}$ b. $6\frac{5}{12}$

iv. பின்வரும் பின்னங்களை ஏறுவரிசையில் எழுதுக.

$\frac{3}{4}$ , $\frac{5}{8}$ , $4\frac{1}{2}$ , $\frac{7}{16}$

v. பெறுமானம் காண்க.

$3 - 1\frac{3}{16} + \frac{1}{2}$

(2+2+2+3+3 = 12 புள்ளிகள்)

02. i. சுருக்குக. $12 + 5(7 - 3) \times 3 - 3$

ii. பின்வரும் பின்னங்களை தசமமாக மாற்றுக.

a. $\frac{27}{100}$ b. $\frac{3}{8}$

iii. தசம எண்ணைப் பின்னமாக எழுதுக.

a. 0.5 b. 4.38

iv. சுருக்குக.

a. $2.67 \times 14$ b. $23.65 \times 1000$ c. $136.8 \div 4$ d. $0.735 \div 10$

v. கணித பாட பரீட்சை ஒன்றில் கீதா 0.48 புள்ளிகளையும் நிஷா $\frac{3}{5}$ பங்கு புள்ளிகளையும் பெற்றனர். இருவரில் கூடிய புள்ளியைப் பெற்றவர் யார்? உமது விடைக்கு காரணம் யாது?

(2+2+2+4+2 = 12 புள்ளிகள்)

03. i. சுருக்குக. 7 km 576 m ÷ 4

ii. ஒரு சதுரத்தின் ஒரு பக்க நீளமானது a அலகுகள் ஆகும்.

a. சுற்றளவை a யின் சார்பில் தருக.

b. $a = 8$ cm எனின் சுற்றளவு யாது?

iii. சமபக்க முக்கோணி ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 8 cm 5 mm ஆகும். முக்கோணியின் சுற்றளவு யாது?

iv. 15 m நீளமான காணியொன்றின் ஒரு பக்க எல்லையில் 6 தூண்கள் சமஇடைவெளியில் நடப்பட்டன. இரு தூண்களிற்கு இடையிலுள்ள தூரம் யாது?

v. செவ்வகம் ஒன்றின் நீளம் அதன் அகலத்தின் இரு மடங்காகும். செவ்வகத்தின் சுற்றளவு 48 cm எனின் நீளம் யாது?


(2+2+2+4+2 = 12 புள்ளிகள்)



kalvi.lk

CamScanner

04. i. $24\,m^2$ பரப்பளவுடைய செவ்வக வடிவக் காணி ஒன்றின் நீளம் $6\,m$ எனின் அகலம் யாது?

ii. 


நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் காண்க.

iii. $144cm^2$ பரப்பளவுடைய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளத்தைக் காண்க.

iv. $5\,cm$ பக்க நீளமுடைய சதுரமுகி ஒன்றின் கனவளவு யாது?

v. ஒரு பெட்டியின் நீளம், அகலம், உயரம் என்பன முறையே $12\,cm, 8\,cm, 6\,cm$ ஆகும்.

a. இப் பெட்டியின் கனவளவு யாது?

b. இப் பெட்டிக்குள் $2\,cm$ நீளமுள்ள எத்தனை சதுரமுகித் தேயிலைப் பெட்டிகளை அடுக்கலாம்?

(2+3+2+2+3 = 12 புள்ளிகள்)

05. i. சுருக்குக.

a. $2a + 5a - a$

b. $7x - 3y - 13 + x + 8y + 15$

ii. மகனின் வயது $x$ வருடங்களாகும். தந்தையின் வயது மகனின் வயதின் மூன்று மடங்கிலும் பார்க்க 5 வயது கூடியதாகும். இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 45 வருடங்களாகும்.

a. தந்தையின் வயதினை x இன் சார்பில் காண்க.

b. இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகைக்கான ஓர் சமன்பாட்டினைப் பெற்று அதனைத் தீர்த்து மகனின் வயதைக் காண்க.

iii. தீர்க்க. $13x - 5 = 99$

iv. $x = 3$ $y = 2$ ஆகும் போது பின்வரும் கோவைகளின் பெறுமானங்களைக் காண்க.

a. $2x + 3y + 1$

b. $\dfrac{4x - 5y + 8}{5}$

(2+3+2+2+3 = 12 புள்ளிகள்)

06. i. a. $7\,l$ $300\,ml$ ஐ மில்லி லீற்றரில் தருக.

b. $4764\,ml$ ஐ லீற்றர், மில்லி லீற்றரில் தருக.

c. $5270\,ml$ ஐ லீற்றரில் தருக.

ii. $1.54\,l$ பழச்சாறும் $1.7\,l$ நீரும் சேர்க்கப்பட்டு பழப்பானம் தயாரிக்கப்பட்டது. இப்பழப்பானமானது 12 குவளைகளில் சமனாக ஊற்றப்பட்டது. ஒரு குவளையில் நிரப்பப்பட்ட பழப்பானத்தின் அளவை மில்லி லீற்றரில் தருக.

iii. பெறுமானம் காண்க.

a. $250g\ 550mg - 150g\ 105mg$

b. $5\,kg\ 120\,g \times 12$

c. $10kg\ 8\,g \div 8$

iv. 6 kg பசளையிலிருந்து 2.4 kg பசளை தென்னங்கன்றுகளிற்கு இடப்பட்டது. எஞ்சிய பசளை 6 மாங்கன்றுகளிற்கு சமமாக இடப்பட்டது. ஒரு மாங்கன்றிற்கு இடப்பட்ட பசளையின் திணிவை கிராமில் காண்க.

(3+3+3+3 = 12 புள்ளிகள்)



kalvi.lk
CamScanner


தரம்
6,7,8
தமிழ்
ONLINE CLASSES
இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.
✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.
மாதக் கட்டணம்
850/=
Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.
075 287 1457
தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.
கல்வி
Digital Learning Platform
www.kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page